IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.
PRESENT: Thiru. M. Murugan, M.L.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.46/2022**

Deposition of witness for PW.2 { Prosecution (L.W.2)
{ Defence
{ Court

1. Name : திரு.மணிவண்ணன்

2. Father Name :

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**நாள். 14.07.2025**

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்ட தனிப்பிரிவில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.12.2018 அன்று தலைமைக்காவலராக நன்னிலம் மதுவிலக்கு அமலாக்கபிரிவில் பணியிலிருந்த போது மதுவிலக்கு சம்பந்தமாக சோதனை செய்ய சென்ற போது ஆய்வாளர் மஞ்சுளா மற்றும் நான், தலைமைக்காவலர் செல்வகுமார் ஆகியோருடன் ஆண்டிப்பந்தல் கடைத்தெரு அருகே மதுவிலக்கு சம்பந்தமாக வாகன சோதனை செய்த போது மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர்

நோக்க வந்த டாடா இண்டிகா வாகனம் டி.என்.04 ஏஎச் 9228 என்ற வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் இருந்த இரண்டு நபர்களில் ஒருவர் ஓடிவிட்டார். மேற்படி வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர் தேசிய பரத் பட்டுக்கோட்டையை சேர்ந்தவர் இருந்தார். ஓடியவர் பெயர் சேது என்று சொன்னார்கள். மேற்படி சேது வாகனத்தின் உரிமையாளர் ஆவார். 13 மணிக்கு வாகனத்திலிருந்து 14 அட்டை பெட்டிகள் வாகனத்தின் பின் சீட்டில் இருந்தது. மொத்தம் 672 பாட்டில்கள் ஒவ்வொரு பாட்டிலிலும் 180 எம்.எல் கொண்ட புளூ கிரேப் பிராந்தியும், அடுத்த 7 பெட்டியில் விஎஸ்ஓபி பிராந்தியும் இருந்தது. மேற்படி நபரை விராணை செய்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார். சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்தும் தடயங்களை கைப்பற்றியும் பார்வை மகசரில் நானும், செல்வகுமாரும் கையொப்பம் செய்தோம். மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.2 ஆகும். வாகனம் மற்றும் மதுபாட்டில்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரியை தக்க வழிக்காவல்மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தோம். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

மகசர் கையால் எழுதப்பட்டதா கணிணியில் தயார் செய்யப்பட்டதா என்றால் கணிணியில் தயார் செய்யப்பட்டது. சம்பவ இடத்திற்கு மடிக்கணிணி எடுத்து சென்றிருந்தோம் அங்கு வைத்து மகசர் தயார் செய்யப்பட்டது. மடிக்கணிணியிலிருந்து பிரிண்ட் அவுட் எங்கு எடுக்கப்பட்டது என்றால் சம்பவ இடத்திற்கு அருகேயுள்ள கடையிலிருந்து எடுக்கப்பட்டது. அந்த கடையின் பெயர் தெரியவில்லை. ஆண்டிப்பந்தல் கடைத்தெருவில் கணிணியை பிரிண்ட் அவுட் எடுக்க கூடிய இயந்திரம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. யார் எந்த கடையில் எடுக்கப்பட்டது என்ற விவரமும் யாரால் மகசர் நகல் எடுக்கப்பட்டது என்ற விவரமும் தெரியவில்லை. நான்

சொல்வது போல் ஆண்டிப்பந்தல் கடைத்தெருவில் மகசர் தயார் செய்யப்படவில்லை என்றாலும் புகார்தாரர் ஆய்வாளர் என்பதால் அவர் போட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.